2020 பிப்ரவரி 17]

திரு. தங்கம் தென்னரசு: *நான் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. நான் அவைக்கு வந்த பிறகுதான். . . (குறுக்கீடு) இல்லை, அது வேண்டாம், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் இருங்கள். நான் அதற்கெல்லாம் விளக்கம் வாங்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். அதெல்லாம் விவாதமாக வரும். (குறுக்கீடு) திரு. தங்கம் தென்னரசு. . . (குறுக்கீடு) இல்லை, அது விவாதமாக வரும். நீங்கள் சொன்னால், அதற்கு சம்பந்தப்பட்டவரை விளக்கம் சொல்ல நான் அனுமதிக்க வேண்டும். அதெல்லாம் இருக்கிறது. (குறுக்கீடு) அதெல்லாம் அனுமதிக்க முடியாது. காலையில் நான்* Chamber*–க்கு வந்த பிறகுதான் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் உள்ளது. உட்காருங்கள். (குறுக்கீடு)*

(இ) திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெள்ளிக்கிழமை அன்று திண்டுக்கல் மாவட்டத்தில் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை நிலவுவதாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அதை உடனடியாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதைக் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வந்தவுடன் அதுகுறித்து என்னவென்று நான் பார்க்கிறேன்.*

திரு. அர. சக்கரபாணி: *ஏனென்றால், சபை இரண்டு நாட்கள்தான் நடைபெற இருக்கின்றது. அதனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நீங்கள் அதைக் கொடுத்திருக்கிறீர்கள். திரு. சக்கரபாணி அவர்களே, நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வந்தவுடனே நான் அதுகுறித்து முடிவெடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை,* point of information *எல்லாம் இல்லை. திரு. மனோ தங்கராஜ், உட்காருங்கள்.* Zero Hour *முடிந்துவிட்டது.*